RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1842

OPEN ACCESS

# அகநானூற்றுப் பாடல்களில் இனக்குழுச் சமூகம்

**இ. செந்தாமரை** [அ, *] **இரா. செல்வி** [அ]

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா.

# Ethnic Community in Akananuru Songs

**I. Senthamarai** [a, *], **R. Selvi** [a]

[a] Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: senthamaraiinbasenthu@gmail.com

Received: 20-08-2022
Revised: 05-10-2022
Accepted: 20-10-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

Akananuru songs portray the life style of the people during Sangam period. Earlier men led a nomadic life for food. At beginning he hunted to live his life later he started to plough and cultivated grains in the land. Thus, he stayed in a permanent place and gradually clan and race emerged. Each clan and race have its own unique rules and customs to follow. These people who lived in groups later started to establish and differentiate their own clan. All these differences can be seen in the Akananuru songs. The article examines the contribution of the ethnic group leader in his society.

**Keywords:** Akananuru, Songs, Ethnic Community, Life, Food

## முன்னுரை

“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே

வாளோடு முன் தோன்றிய மூத்த குடி”

தமிழ்க்குடி என்ற சிறப்பிற்கேற்ப சங்க கால மக்களின் வாழ்வியல் நிலையை அகநானூறு படம்பிடித்துக் காட்டுகிறது (Venkatasamy, 2004). ஆரம்பகால மனிதன் உணவிற்காக நாடோடி வாழ்க்கை வாழ்ந்தான். முன்பு வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டிருந்தான். அந்த நிலையிலிருந்து முன்னேறி விவசாயத்தின் அருமையை உணர்ந்து மண்ணின் தன்மையை ஆராய்ந்து ஓரிடத்திலேயே நிலையாகத் தங்கி வாழ ஆரம்பித்த நிலையில் மனிதச் சமூகத்தில் இனமும் குலமும் தோன்றிப் படிப்படியாக வளர்ச்சி அடைந்தன. ஒவ்வொரு இனத்திற்கும் குலத்திற்கும் ஏற்பச் சட்டங்களும், திட்டங்களும் தனக்கென்ற தனித்த அடையாளத்தைக் காட்டுகின்றன (Mathaiyan, 2004). அவ்வாறு வகுக்கப்பட்ட சட்டதிட்டங்கள் காலத்திற்கேற்ப மாற்றம் அடைந்து வருவது இயல்பு. இம்மாற்றந்தான் காலப்போக்கில் ஒரு பக்கம் அதிகாரம் மேலோங்கி நிற்க வழிவகை செய்தது எனலாம். கூட்டம் கூட்டமாக வாழ்ந்த மனிதன் தனித்தனிக் குலமாக இயங்கிய தன்மை, ஒவ்வொரு குலத்திற்கும் தனித்தன்மையை வேறுபடுத்தி நிலைநிறுத்திச் செல்கிறது. இந்த வேறுபாட்டை தான் அகநானூறு பல்வேறு விதமாகப் பதிவு செய்துள்ளது. சமூக விஞ்ஞானப் பார்வையுடன் விளங்கும். மானிடவியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இனக்குழு தலைவன் தன் சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்பை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வுமுறை

அகநானூற்றுப் பாடல்களில் இனக்குழு சார்ந்த மக்களின் பண்பாட்டுக் கூறுகளை ஆய்வு செய்து தீர்மானிக்கும் நோக்கில் இந்தக் கட்டுரையின் பொருண்மை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முதல் கட்டமாகப் பல உட்பிரிவுகளைக் கொண்ட மானிடவியல் கோட்பாட்டினை வாசித்து பண்பாட்டு மானிடவியல் வழியாக இவ்வாய்வு சங்க அகப்பாடல் கருத்தியலோடு பொருத்திப் பார்த்து ஆய்ந்துரைக்கப்பட்டது. ஆய்வு அணுகுமுறையானது விளக்கமுறை மற்றும் பகுப்பாய்வு திறனாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்க இலக்கியப் பாடல்களில் இனக்குழுத்தலைவன் குறித்த ஆய்வு என்பதால் மானிடவியல் அணுகுமுறையும் மேற்கொள்ளப்பட்டது. தங்கள் இனத்தைப் பாதுகாத்து, உணவினைப் பகிர்ந்தளிக்கக் கூடியவனாகவும், போர்த்தொழிலுக்குரியவனாகச் செயல்பட்டு பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புத் தன்மையில் சிறந்துள்ளான் என்பதை இக்கட்டுரை வாயிலாக விளக்கமுறப்படுகிறது.

## அகநானூறு

பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமான சங்க இலக்கியத்தில் அகத்திணைப் பாடல்களே மிகுதி. திணை என்னும் பெயரே அகத்திணைக்குரியதாக அமைந்தது. எட்டுத்தொகையுள் ஒன்றான அகநானூறு 13 அடி சிற்றெல்லையும் 31 அடி பேரெல்லையும் கொண்டது. இதிலுள்ள நானூறு பாடல்கள் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று முதல் நூற்றிருபது வரையிலான பாடல்கள் “களிற்றியானை நிரை” என்றும், 121 முதல 300 வரையிலான பாடல்கள் மணிமிடைப் பவளம் எனவும், 301 முதல் 400 வரையிலான பாடல்கள் நித்திலக்கோவை எனவும் பெயரிடப்பட்டுள்ளன. இதனைத் தொகுத்தவர் உப்பூரிக்குடிகிழார் மகனார் உருத்திர சன்மர், தொகுப்பித்தவர் உக்கிரப்பெருவழுதி.

## மானிடவியல்

18 ஆம் நூற்றாண்டை மானிடவியலின் தொடகக்காலம் என்பர். இந்நூற்றாண்டில் ஜெருமானிய தத்துவவியலாளர் ஜே. ஜே ஹெர்டர் “மனித வரலாற்றைப் பற்றிய தத்துவத்தின் கருத்துகள்” என்ற தலைப்பில் நான்கு தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இந்தியாவில் மானிடவியலின் தோற்றம் வங்க ஆசியக் கழகத்தோடு தொடர்புடையது. இக்கழகம் கி.பி. 1774ல் சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இலக்கிய மானிடவியலின் தந்தை சரத் சந்திரராய் மானிடவியலாளருள் முன்னோடியாகத் திகழ்ந்தார். தென்னிந்திய மானிடவியலை எல். கே அனந்தகிருஸ்ண ஐயர் வளர்த்தார். மானிடவியல் சார்ந்த நூல்களும் சங்க இலக்கியம் குறித்த ஆய்வு நூல்களும் முதன்மைச் சான்றாதாரம் ஆகும்.

## பண்பாட்டு மானிடவியல்

பண்பாடு என்பது மனிதனில் உடல்சாராத தகவமைப்பு. “பண்பாடு” என்பது மனிதனால் தோற்றுவிக்கபட்ட சூழல். இதில் பொருள்சாராப் பண்புகள், சடங்குகள், நம்பிக்கைகள் முதலானவை அடங்கும் (Bhakvatchala Bharathi, 1990).

## இனக்குழுச் சமுதாயம் - விளக்கம்

சங்ககாலத்திற்கு முன்பாகப் பழந்தமிழகத்தில் இனக்குழுச் சமுதாய அமைப்பு இருந்துள்ளது. அவ்வினக் குழுவின் எச்சங்கள் சங்க இலக்கியத்திலும் தொடர்ந்திருப்பதைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு தலைவன் இருந்துள்ளதைச் சங்க இலக்கிய பாடல்களின் மூலம் அறியலாம். இனக்குழு என்பதற்கு வாழ்வியல் களஞ்சியம் பின்வருமாறு விளக்கம் தருகிறது. “மூதாதையிடமிருந்து வந்தவர்கள் ஒருகால்வழிக் குழுவினர் என்று அழைக்கப்படுவர். ஒரு

மூதாதையிடமிருந்து தொடரும் உறவுக் குழுவானது குலம் என்று குறிப்பிடுவர். இன்ன குலம் இன்ன மூதாதையிடமிருந்து வந்ததென்று தக்கச் சான்றுகளும் அறிதியிட்டுச் சொல்ல முடியாது. ஆனால் குலங்களின் மூதாதையர்களைப் புனைகதைகள், புராணங்கள் போன்றவற்றின் வாயிலாக யூகித்தறியலாம். குலம் ஆண் வழியில் அல்லது பெண் வழியில் தொடர்ந்து செல்லும் இயல்புடையது. பல்குலங்கள் ஒருங்கிணைந்து ஓர் இனக்குழுவையோ சாதியையோ உருவாக்கும். சில இனக்குழுக்களில் எல்லாக் குலங்களும் சமமான இருபிரிவுகளாகப் பிரிந்திருக்கும் குலத்தினர் தங்களுக்கென ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வர் அவரே அனைவருக்கும் வழிகாட்டியாக இருப்பார்".

தினைப்புனம் காத்தல், வேட்டைத் தொழில் செய்தல் என்ற நிலையில் கானவர், எயினர் தலைவன் இருந்து வந்துள்ளான் என்பதை அகநானூறு பாடல்களின் மூலம் அறியமுடிகிறது.

"கொடி பிணங்கு அரில் இருள் கொள் நாகம்
மடி பதம் பார்க்கும், வயமான் துப்பின்,
ஏனல் அம் சிறு தினைச் சேணோன் கையதைப்
பிடிக் கை அமைந்த கனல் வாய்க் கொள்ளி
விடு பொறிச் சுடரின் மின்னி, அவர்
சென்ற தேஎத்து நின்றதால், மழையே" (Venkatasamy Nattar, 2004)

சிறிய தினைப்புனம் காக்கும் வலிமைமிக்கச் சிங்கம் போன்ற ஆற்றல் வாய்ந்த கானவன் பரண்மேல் இருந்து கொண்டு நெருப்புக் கட்டையை வீசிக் காவல் புரிந்ததை இப்பாடல் காட்சி படுத்துகின்றது.

"கல்லா இளையர் பெருமகள் புல்லி
வியன் தலை நல் நாட்டு வேங்கடம் கழியினும்"
"மழ புலம் வணக்கிய மாவண் புல்லி"
"மாஅல் யானை மறப்போர்ப் புல்லி"
"பொய்யா நல்லிசை மாவண் புல்லி" (Venkatasamy Nattar, 2004)

புல்லி என்பான் வேடர்களுக்குத் தலைவனாக இருந்தவன். வேட்டைத் தொழிலின்றி வேறு தொழில் தெரியாத நிலையில் காட்டிலிருந்து பிழைத்து வந்த யானையின் குட்டியைக் கள்ளிற்கு விலையாகக் கொடுத்துச் சென்ற இனக்குழுத் தலைவன் இருந்துள்ளதைக் காண்கிறோம்.

## இனக்குழு சமுதாயத்தில் தலைவனின் பங்கு

இனக்குழுச் சமூகத்தில் பங்கீடுதல் என்பது இன்றியமையாத ஒன்றாகும். சொத்துடைமை என்பது பொதுவில் வைக்கப்பட்ட நியதி வேட்டையாடி, கொள்ளையடித்துப் பெற்ற பொருளைத் தங்கள் இனக்குழுக்களில் பகிர்ந்துள்ளனர். இதனை, "அனைத்துச் சமுதாயங்களிலும் மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டுப் பொருள்களையும் செய்யும் பணிகளையும் பரிமாறிக் கொள்கின்றனர். இவை பரிமாற்றம், மறு பங்கீட்டு முறை, சந்தை அல்லது அங்காடி முறை ஆகிய மூன்று நிலைகளில் நடைபெறுகின்றன. சமுதாயத்தின் அமைப்பிற்கேற்றபடி உற்பத்தி முறைக்கேற்பவும் நுகர்வுத் தேவைக்கேற்பவும் அரசியல் முறைக்கேற்பவும் இம்மூன்று முறைகளும் ஏதாவதொன்று முதன்மையாக ஒவ்வொரு சமுதாயத்திலும் செயலபடுகின்றது" (Bhakvatchala Bharathi, 2005).

"மை படு திண் தோள் மலிர வாட்டி,

பொறை மலி கழுதை நெடு நிரை தழிஇய

திருந்து வாள் வயவர் அருந்தலை துமித்த

படுபுலாக் கமழும் ஞாட்பில், துடி இகுத்து

அருங்கலம் தெறுத்த பெரும் புகல் வலத்தர்

வில் கெழு குறும்பில் கோள் முறை பகுக்கும்" (Venkatasamy Nattar, 2004)

சுரவழியில் பயணிக்கும் வணிகச்சாத்தரைக் கொன்று அவர்களிடமிருந்து எடுத்த பெறற் கரிய அணிகலண்களைத் திறையாகப் பெற்று பாட்டினிடத்தே அவரவர்க்குரிய பங்குகளாகத் தமக்குள் பகுத்துக் கொள்வர்.

"புலவுப் புலி துறந்த கலவுக் கழி கடு முடை,

இரவுக் குறும்பு அலற நூறி, நிரை பகுத்து

இருங்கல் முடுக்கர்த் திற்றி கொண்டும்

கொலை வில் ஆடவர் போல"

உணவினைத் தமக்குள் பகிர்ந்து உண்ணும் பழக்கமுடையவர்களாக இருந்துள்ளனர். இரவு நேரத்தில் காட்டரண்களில் உள்ளோர் அலறுமாறு ஆநிரைகளைக் கைப்பற்றித் தமக்குள் அறுத்துப் பகுத்துக் கொண்டுள்ளனர்.

"செல்சாத்து எறியும் பண்புஇல் வாழ்க்கை

வல்வில் இளையர் தலைவர், எல்உற"

அன்பில்லாத வாழ்க்கையினை உடைய வலிய வில்லினைக் கையில் ஏந்திய ஆறலைக் கள்வர் வணிகக் கூட்டத்தை வருத்தியுள்ளனர் (Venkatasamy Nattar, 2004). வணிகக் கூட்டத்துத் தலைவன் ஆறலைக் கள்வருக்குக் கொடுக்க பணமின்றித் தன் வீட்டிலுள்ள யானைக் கொம்பினைக் கள்ளிற்குத் திறையாகக் கொடுத்துள்ளான்.

## இடம்பெயர்தல்

மக்கள் பொதுவாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடப்பெயர்வு செய்வதென்பது கல்வி, உணவு, தொழில் ஆகியவற்றால் நிகழும். ஆனால், போரின் பொழுது பாதுகாப்புக் கருதியும் இடப்பெயர்வு நிகழும். இவை தேவை கருதி நிகழக்கூடியது ஆகும். அகநானூற்றில் ஆறலைக் கள்வரிடம் உடைமைகளை இழந்துவிடக் கூடாது என்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இடம்பெயர்த்துள்ளனர்.

"கொழுங்கடி போகிய பெரும்பாழ் மறைத்து"

கொற்றவை வழிபாடு"

பழந்தமிழகத்தில் வாழ்ந்த இனக்குழு மக்கள் கொற்றவைக்கு நிகழ்த்திய வழிபாடு சடங்குத் தன்மையுடன் அமைந்துள்ளதைக் காணலாம். "சடங்கின் தன்மைகள் முதன்மையான கூறு, அது சிந்தனை வடிவில் நிலைநிறுத்தப் படாமல் செயல்வடிவத்தில் நிகழ்த்தப்படுவதாகும். எனினும் சடங்கின் செயல் தன்மையானது சிந்தனை வடிவின் பின்புலத்தோடு வெளிப்படுத்துவது ஆகும். ஒவ்வொரு சமூகத்தின் மூலவடிவமாக விளங்குவது அச்சமூகத்தினர் கொண்டுள்ள தொன்மங்களாகும்" (Bhakvatchala Bharathi, 1990).

"ஓங்குபுகழ்க்

கான் அமர் செல்வி அருளலின்...."

“தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்

கொழுப்பு ஆ எறிந்து, குருதி தூஉய்,

புலவுப்புழுங்கு உண்ட வான்கண் அகல்அறை...”

மிகப் புகழ்வாய்ந்த கொற்றவை அருள்கூர்ந்து அளித்தலின் வெள்ளிய காலினையும் பல படையையுடைய மக்களுக்குத் தெய்வம் அளித்த வெற்றி (Venkatasamy Nattar, 2004).

## நடுகல்

இறந்தோரின் ஆற்றல் வாழ்வோரின் நலனில் பெரும்பங்கு வகிக்கிறது என்னும் கருத்தாக்கத்தால் ஏற்பட்டதே முன்னோர் வழிபாடாகும்.

“நட்டபோலும் நடாஅ நெடுங்கல்

அகலிடங் குயின்ற பல்பெயர் மண்ணி

நறுவிரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய...”

இயற்கையிலிருந்துத எழுந்த நீண்ட கற்களிணை நீராட்டி சிவந்த கரந்தைப்பூவினைத் தொடுத்து நடுகல்லிற்குச் சார்த்தி புதுமணத் தம்பதிகள் வழிபட்டுள்ளனர். இறப்பின் அச்சமின்றியும் வாழ்வின் சிறப்புக் குறித்தும் எவ்வித தயக்கமின்றிப் புதுமணத் தம்பதிகள் வாழ்ந்துள்ளனர்.

## உணவினைப் பகிர்ந்துண்ணல்

“புலவுப் புலி துறந்த கலவுக் கழி கடுமுடை...”

தெய்வம் தங்கிய கரிய வேப்பமரத்தடியில் கொழுப்பினை உடைய பசுவினைத் தடித்த உதிரத்தைத் தூவிப்பலியிட்டு அதன் புலாலைப் புழுக்கி அவ்விடத்திலேயே பகிர்ந்து உண்டனர். தெய்வத்தை வணங்கிப் பின் தன் இனத்தோடு சேர்ந்து உண்ணும் பழக்கமிருந்துள்ளது.

## போர்க்கான உளவியல்

நிலத்தைக் கைப்பற்றுவதற்காக நிலப்பரப்பினை விரிவுபடுத்துவதற்காக மற்றொரு நாட்டின் மீது போர் மேற்கொள்ளப்படுகிறது. இந்த முறையும் பாலியல் பொறாமையால் உருவானதே. மானிடவியலாளர் நிலத்தைப் பெண்ணாகக் கருதுகிறார்கள். ஒரு நாட்டிலுள்ள காவல்மரம் ஆண்மைக் குறியீடாகக் கருதப்படுகிறது. அந்நிலத்தைக் கைப்பற்ற எண்ணுபவர்கள் அந்நாட்டிலுள்ள காவல் மரத்தை அழிக்கின்றனர். அதுபோல அந்நாட்டை கைப்பற்ற எண்ணுபவர்கள் ஆநிரையைக் கைப்பற்றுகின்றனர். அதனால் போர் ஏற்படுகிறது. இதனை,

“கன்று காணாது, புண் கண்ண, செவி சாய்த்து,

மன்று நிறை பைதல் கூர, பல உடன்

கறவை தந்த கடுங் கால் மறவர்

கல்லென் சீறூர் எல்லியின் அசைஇ,

முதுவாய்ப் பெண்டின் செது காற் குரம்பை....”

ஊர்களில் உள்ள மன்றத்தில் பசுக்கூட்டங்களைக் காணாத நிலையில் பொலிவற்ற கண்களைக் கொண்ட கடுங்காவல் புரிந்த வெட்சி மறவரின் கால்கள் வேகமெடுத்து மீதமிருக்கின்ற கறவைகளைப் பத்திரப்படுத்தி மீட்கச் சென்றனர். ஆநிரைகளைக் கவர்தலும் மீட்டலும் இனக்குழு சமூகத்தின் வாழ்வாதாரப் பிரச்சனையாக இருந்துள்ளது.

## முடிவுரை

மனிதனைப் பற்றி மனிதன் அறித்து கொள்ளும் துறை மானிடவியல் துறை ஆகும். பண்பாட்டுக் கட்டமைப்புதான் மனிதனைப் பிற உயிரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. மானிடவியல் துறை சார்ந்த உட்கூறுகள் சங்க இலக்கியப் பாடல்களில் பொதிந்து கிடக்கின்றன. கூட்டம் கூட்டமாக வாழ்ந்த மனிதன் குழுவாக வாழ ஆரம்பித்தான். தங்கள் இனக்குழுவில் தனக்கென்று ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்தலை அகநானூற்றில் குடவோலைத் தேர்தல் முறை மூலம் அறிந்து கொள்ளலாம். தன் தொழில் மூலம் பெற்று வரும் பொருள்களைத் தன் இன மக்களுக்குப் பகிர்ந்தளித்தான். இறை வழிபாடு இனக்குழு சமுதாயத்திடம் மேலோங்கியிருந்தது. சங்ககாலமே, தற்காலமோ, எக்காலத்திலும் மனிதனிடமிருந்து பண்பாட்டைப் பிரிக்க இயலாது.

## References

Bhakvatchala Bharathi, (1990) Thamilar Manidaviyal, Meiyappan Pathippagam, Chennai, India.

Bhakvatchala Bharathi, (2005) Manidaviyal Kotpadukal, Manivasagar Pathippagam, Chennai, India.

Mathaiyan, P. (2004) Sangakaala Ennakkulu Samuthaiyam, Paavai Pathippagam, Chennai, India.

Samy, P.L. (1976) Tamil Ilakkiyathil thaaith deiva valipadu, New Century Book House, Chennai, India.

Venkatasamy Nattar, (2004) Agananooru, New Century Book House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License